கும்பகோணம் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் – மு. காந்திராஜ், பி.காம்., எம்.பி.ஏ.,

ந.க. எண். 14185/2025/டி1 **நாள். 17.03.2026**

பொருள்:	மனைப்பிரிவு ஒப்புதல் – கும்பகோணம் மாநகராட்சி தாராசுரம் கிராமம் புல எண். 171/1,171/2,171/3--ல் உள்ள 5500.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.
பார்வை :	1. திரு. C. பிரபு, திரு. S. நந்தீஸ்வரன், கும்பகோணம் அவர்களின் விண்ணப்ப நாள். 30.12.2025 2. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண்.21CR42VH(56835)/2025/TCP, நாள். 14.11.2025. 3. தானபத்திர எண். 4022/2025 நாள். 17.11.2025. 4. இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். 493 நாள். 13.03.2026

*****

பார்வை 1–ல் கண்டுள்ள மனுதாரரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பார்வை 2–ல் கண்டுள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர். தஞ்சாவூர் அவர்களின் கடிதத்தில் கும்பகோணம் மாநகராட்சி தாராசுரம் கிராமம் புல எண். 171/1,171/2,171/3–ல் உள்ள 5500.00 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/கு.உதி.கு எண் SWP/52/2025 எனவும் கும்பகோணம் உள்ளூர் திட்ட குழுமத்தால் திட்ட அனுமதி எண். 101/2025 எனவும் எண்ணிடப்பட்டு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கப்பட்டு இம்மாநகராட்சியின் இறுதி ஒப்புதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கடிதத்துடன் பார்வை 3–ல் கண்ட தானபத்திரத்தின் படி சாலை மற்றும் பொது உபயோகத்திற்கான இடங்கள் இம்மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.12843/2022/டிபி–2 நாள்.20.10.2022–ன் படி இம்மாநகராட்சி பொறியியல் பிரிவு மேற்பார்வையின் கீழ் அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டு பொறியியல் பிரிவின் சான்று பெற்று மனைப்பிரிவு ஒப்புதலுக்கான அனைத்து கட்டணங்களும் மனைப்பிரிவு அபிவிருத்தியாளரால் இம்மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 4–ல் கண்டுள்ள இம்மாநகராட்சியின் மாமன்ற தீர்மானத்தின் படி மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால் நகர் ஊரமைப்பு துறையால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுடன் கூடுதலாக கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

(1) மேற்படி மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள பொது இடங்களை கம்பி வேலி அமைத்து பாதுகாக்க வேண்டும்.

(2) தாங்கள் அமைத்து கொடுத்த அடிப்படை வசதிகளில் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டால் உடன் நிவர்த்தி செய்து தர வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களது வைப்புத் தொகையில் இருந்து சரிசெய்யப்படும்.

ஆணையர்,
கும்பகோணம் மாநகராட்சி

17.3.26

பெறுநர்:
திரு. C. பிரபு,
திரு. S. நந்தீஸ்வரன்,
176/5, அன்னை அஞ்சுகம் நகர்,
உள்ளூர்,
கும்பகோணம்.

நகல்:

1. சார்பதிவாளர், கும்பகோணம்.
2. உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், கும்பகோணம்.
3. மாநகராட்சி செயற்பொறியாளர், கும்பகோணம்.
4. நகரசார் ஆய்வாளர் , கும்பகோணம். – மனை உட்பிரிவு மேற்கொள்ள